# 3.1 என்னை நானே ஏற்றுக்கொள்ளுதல்

**வேத வசனம்:** உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே. ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். 1 கொரி 6:19,20

**அறிக்கை:** என்னை மீட்கும்படி இயேசு விலைக்கிரயம் செலுத்திவிட்டதால் நான் என்னை நேசிக்கிறேன்.

**சத்தியம்:** நாம் பாவிகளாயிருக்கும்போதே இயேசு கிறிஸ்து நமக்காக மரித்தார். மனிதக்குலத்தை மீட்கும்படியாகத் தேவன் எவ்வளவு பெரிய விலையைச் செலுத்தினார் என்பதை இங்கு பார்க்கப்போகிறோம். தேவனுடைய அன்பினால் நாம் நம்மையே ஏற்றுக்கொள்ள முடிகிறது.

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *நீங்கள் யாரைப்போல உங்களை எண்ணுகிறீர்கள்? தவளையைப் போலவா? இராஜகுமாரனைப் போலவா?*
- *ரோமர் 5:8, 2 கொரி 5:17 ல் தேவன் நம்மைக்குறித்து என்ன நினைத்துள்ளார்?*

## பாடக்குறிப்புகள்

- ✷ **சிறந்த மற்றும் தியாக அன்பு** - *ரோ 8:32*
- ✷ **மனச்சோர்வு மற்றும் தாழ்வான சுயமதிப்பீடு** - *ரோ 8:32*
- ✷ **தேவன் மனிதரை அதிகமாக நேசிக்கிறார்** - *ரோ.5:8, ஏசாயா 53:7-9*
- ✷ **கர்த்தருக்குள் சுயத்தை ஏற்றுக்கொள்ளுதல்** - *எபே 1:3-6*
- ✷ **என்னையே அதிகமாக நேசித்துக்கொண்டிருத்தல்** - *எபே 2:4-6*

## வேதப்பகுதி

*1 யோவான் 4:8-12*

## கண்ணாடி கண்ணாடி

தேவன் உன்னை எவ்வாறு காண்கிறார்? தேவன் உன்னில் உருவாக்கி வைத்திருக்கிற நேர்மறையான குணங்களை இந்தக் கண்ணாடி படத்துக்குள் எழுதவோ அல்லது வரையவோ செய்.

## செயல்

**தேவன் உன்னை நேசிப்பதால் நீயும் உன்னை நேசிக்க வேண்டும். உன்னைப்பற்றி நீ தாழ்வாகச் சிந்திப்பதை இன்றிலிருந்து விட்டுவிடு. உன்னை நீ கண்ணாடியில் பார்த்து உன்னிடம் உள்ள நல்லவைகளையும் நேர்மறையானவைகளையும் பார். தேவனும் அவைகளைப் பார்க்கிறார்.**

## சிந்திக்க:

*தேவனுடைய கண்கள் உன்னை உற்று நோக்குவதால் உன்னைக்குறித்த உன்னுடைய கண்ணோட்டம் மாறுகிறது.*

## ஜெபம்:

*தேவனுடைய கண்கள் மூலம் உன்னைக் காண அவருடைய உதவி கேட்டு உன்னை நீ குறைவாய் மதிப்பிடுவதை மாற்றிக்கொள்ள உதவி வேண்டி ஒரு ஜெபத்தை எழுது.*